# அமைச்சரவையில் அதிரடியான மாற்றம்! சுகாதார அமைச்சரானார் ரமேஷ் பத்திரன



இன்று காலை இலங்கை அமைச்சரவையில் மேற்கொள்ளப் பட்ட மாற்றத்திற்கேற்ப அமைச்சரவை அந்தஸ்துள்ள மூன்று அமைச்சர்கள் இன்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் பதவிப்பிர மாணம் செய்துகொண்டனர்.

சுற்றாடல் அமைச்சராக கெஹலிய ரம்புக்வெல்லவும், விவசாய அமைச்சிற்கு மேலதிகமாக பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சராகவும் மகிந்த அமரவீரவும், கைத்தொழில் அமைச்சர் பதவிக்கு மேலதிகமாக சுகாதார அமைச்சராகவும் வைத்தியர் ரமேஷ் பத்திரனவும் பதவியேற்றுள்ளனர். தற்பொழுது நிதி இராஜாங்க அமைச்சராக பதவி வகிக்கும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய, அமைச்சரவை அந்தஸ்தற்ற தோட்டத் தொழில் முயற்சிகள் அமைச்சராகவ நியமிக்கப்பட்டுள்ளார்.


மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 06 திங்கட்கிழமை 23.10.2023 கதிர் 98



யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு புதிய வியாபாரக்குறி!
A new brand from Jaffna!
பூ ஆடை
PooAadai
ஆண், பெண் இருபாலாருக்குமான ஆடைகள்


## தலைவலிக்கு தலையணையை மாற்றுவது போன்றதே இந்த அமைச்சரவை மாற்றம்!

### பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் சாடல்



நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்ப தற்காக அமைச்சர்களை மாற்றுவது மட்டும் போதுமானதாக அமையாது, என நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இன்று இடம்பெற்ற ஊடகசந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் பதவி மாற்றமானது தலை வலிக்குத் தலையணையை மாற்றுவது போன்றது எனவும், இவை அனைத் தும் கண் கட்டும் வித்தைகள் எனவும் அவர் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இவை மூலம் பிரச்சினைகள் தீர்க் கப்படாது. நாட்டில் இருக்கும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு ஓர் அமைச்சரை மாற்றி இன்னொரு அமைச்சரை நியமிப்பதன் மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்றும்

2

## அமைச்சர்களை மாற்றிப் பிரச்சினைகளை மூடி மறைக்க ஜனாதிபதி முயற்சி செய்கிறார்!

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. குற்றச்சாட்டு




அரசாங்கம் அமைச்சர்களை மாற் றிப் பிரச்சினைகளை மூடி மறைக்க முற்படுவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருண தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத் தில் இன்று இடம்பெற்ற ஊடகசந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள் ளார்.

இன்று அமைச்சரவை மாற்ற மொன்று இடம்பெற்றது. இதனால், பிரச்சி னைகள் தீருமா? என்றால், இல்லை.

அமைச்சுக்களையும், அமைச்சர்க ளையும் மாற்றிப் பிரச்சினைகளை மூடி மறைக்க முற்படுகின்றனர்.

சுகாதார அமைச்சில் நிகழ்ந்த முறை கேடுகள், ஊழல்கள்

2

## எதிர்கட்சி எடுத்த முடிவு சரியானது என்று ஜனாதிபதி இன்று தீர்மானித்திருக்கின்றார்!

### உதய கம்மன்பில எம்.பி. கருத்து

கெஹெலிய ரம்புக்வெல்ல சுகாதார அமைச்சுப் பதவியை வகிக்க முடியாது, என ஜனாதிபதி தீர்மானித்ததையிட்டு மகிழ்ச்சி அடைவதாக பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரி வித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகசந்திப்பி லேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு

2



## 3 மாதங்களுக்கு ஒரு முறை மின் கட்டணத் திருத்தம் மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவிப்பு

இலங்கை மின்சார சபையின் மறுசீரமைப்புத் தொடர்பான முன் மொழிவுகள் அடுத்த வாரம் அமைச்ச ரவையில் முன்வைக்கப்பட உள்ள தாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரி வித்துள்ளார்.

மின்சாரக் கட்டணத்தை 6 மாதங் களுக்குப் பதிலாக 3 மாதங்களுக்கு ஒருமுறை திருத்தும் பொறிமுறையை உருவாக்க வேண்டும், என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2



## பயங்கரவாதம் என்ற பெயரில் காஸாவிலும் இனப்படுகொலை!

### கஜேந்திரகுமார் எம்.பி. ஆதங்கம்



போன்று 15 வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் நடந்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யூதர்களுக்கு அவர்களின் நாட்டைக் கொடுக்க வேண்டும். அவர்கள் சமாதானமாக வாழ வேண்டும். அதேபோன்று பலஸ்தீனத்துக்கும் அநீதி ஏற்பட்டுள்ளது.

அங்கே விட்டுக்கொடுப்பு

2

## சீரற்ற காலநிலையால் பரவும் நோய்கள் குழந்தைகள் குறித்து எச்சரிக்கை தேவை!

### வைத்திய நிபுணர் தீபால் பெரேரா

குழந்தைகள் மத்தியில் டெங்கு மற்றும் வயிற்றுப்போக்குப் பாதிப்பு மேலும் அதிகரித் துள்ளதாக லேடி ரிட்ச்வே சிறுவர் வைத் தியசாலையின் குழந்தை நல வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிரவும் சீரற்ற காலநிலை யினால் இந்த நோய்கள் பரவும் நிலை உருவாகியுள்ளது. குழந்தைகளுக்கு வயிற்றுப்போக்கு அதிகமாக இருப்பதால் முடிந்தவரை வீட்டில் தயாரிக்கப்பட்ட உணவு மற்றும் கொதித்தாறிய நீரையே பெற்றோர்கள் வழங்க வேண்டும், என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நிலவும் மழையுடன் கூடிய காலநிலையின்போது நாட்டில் தற்போது 3 தொற்று நோய்கள் பல பகுதிக ளிலும் பரவி வருவதாக சுகாதாரத் தரப்பி னர் தெரிவித்துள்ளனர்.

2


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# சர்வதேச அரங்கில் கவனத்தை ஈர்த்த செந்தில் தொண்டமானின் உரை!

பீஜிங்கில் நடைபெற்ற Belt and Road மன்றத்தின் 10 ஆவது ஆண்டு விழாவில் 130 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் உரையாற்றுகையில்,

இவ்வுலகம் அனைவரும் வாழ சிறந்த இடம் எனவும், மனிதர்களுக்கு இடையில் புரிந்துணர்வு இல்லாமையால் இன்று மனிதர்கள் வாழ முடியாத இடமாக இவ்வுலகம் மாறிக்கொண்டிருக்கின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

நண்பர்களாக இருக்க வேண்டிய நாடுகள் இன்று பகைவர்களாக மாறியுள்ளனர். இம்மாநாட்டில் இருக்கும் 130 நாடுகளும் ஒன்றிணைந்து ஆயுத கலாசாரத்திற்கு முதலில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் எனவும் அவர் அங்கு குறிப்பிட்டார்.

செந்தில் தொண்டமான் கருத்துத் தெரிவிக்கும் வரை ஆயுத மோதல்கள் குறித்து அனைவரும் மௌனம் காத்திருந்தனர். அவரின் உரைக்குப் பின்னர் அவருடைய கருத்தை மேற்கோள்காட்டி பல தலைவர்கள் உரையாற்றினர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாநில செனட் தலைவர் ராபர்ட் மைல்ஸ் ஹெர்ட்ஸ்பெர்க், செந்தில் தொண்டமானின் பொதுநலமிக்க விவேகமான உரைக்கு நேரில் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார். (க)

# மூவருக்கு எதிராக நடவடிக்கை ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

கட்சியின் தீர்மானங்களுக்கு முரணாகச் செயற்பட்ட அரவிந்த குமார், வடிவேல் சுரேஷ் மற்றும் ஏ.எச்.எம். பௌஸி ஆகியோருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளதாக அறியமுடிகின்றது.

அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியமைக்காக இவர்களை கட்சியின் உறுப்புரிமையை நீக்கவும் கட்சியின் செயற்குழுவில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் ஊடகமொன்றுக்கு உறுதிப்படுத்தியுள்ளார்.

ஏற்கனவே அரவிந்தகுமாருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுவரும் நிலையில் அரசாங்கத்தில் இணைந்து கல்வி இராஜாங்க அமைச்சுப் பதவியைப் பெற்றுக்கொண்ட ஏ.எச்.எம். பௌஸிக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

## சீரற்ற காலநிலையால் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி, கண் நோய், வயிற்றுப்போக்கு, சுவாசக் கோளாறுகளுடன் கூடிய காய்ச்சல் போன்றவை பதிவாகி வருவதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, இவ்வாறான நிலைமைகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மக்கள் தமது சுகாதாரப் பழக்கவழக்கங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (04)

## பயங்கரவாதம் என்ற பெயரில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டிருந்தது. இந்த விட்டுக்கொடுப்பை பாலஸ்தீன மக்கள் அதிகமாகச் செய்ததை மறுக்க முடியாது.

யூதர்களின் நாடு அந்த உடன்படிக்கைகளுக்கு இணங்கி நடந்திருக்க வேண்டும். அவர்களுக்கு சொந்தமான நாடு கிடைக்கும் போது, அந்த நாட்டைச் சரியான முறையில் நடத்தக் கூடிய முறையிலேயே அது அமைய வேண்டும்.

நாங்கள் பிழையைப் பிழையென்று நேர்மையாகக் கூற வேண்டும். அதற்கும் மேலாக அங்கு சென்று விட்டது. பயங்கரவாதம் என்ற பெயரில் இனப் படுகொலைகளே நடக்கின்றன, என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

மக்களின் உணவு, மருத்துவம், நீர் வசதிகள் மறுக்கப்படுவதன் நோக்கம் என்ன? எனக் கேள்வியெழுப்பியுள்ள அவர், அந்த மக்கள் தொகையை அழிக்கும் செயற்பாடுகளே நடக்கின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

அங்குள்ள மக்கள் இலக்கு வைக்கப்படுகின்றனர். மக்களைக் குறிப்பிட்ட இடத்துக்குப் புகலிடம் தேடிச் செல்லுமாறு கூறி, அவர்கள் அவ்வாறு செல்லும்போது அவர்களை நோக்கித் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. எதிர்கால பாலஸ்தீன நாட்டை அழிப்பதாகவே இது அமைகிறது. 15 வருடங்களுக்கு முன்னர் இப்போது காஸாவில் நடப்பதைப் போன்று இலங்கையில் நடந்தது.

வடக்கு, கிழக்கில் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தப்பட்டதுடன் அவற்றின் மீது குண்டுகள் வீசப்பட்டுள்ளன.

தமிழ் மக்கள் எந்தத் தரப்பினரைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் நாங்கள் இஸ்ரேல் என்ற அரசுக்கு எதிரானவர்கள் அல்லர்.

இந்த நாடாளுமன்றத்தில் இருப்பவர்கள் மத்திய கிழக்கில் உள்ள நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்து தமக்கென பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும், எனவும் அவர் வலியுறுத்தியிருக்கிறார். (க)

## 3 மாதங்களுக்கு ஒரு முறை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுக்கு இரண்டு முறைதான் மின் கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ள முடியும், என்ற தவறான கருத்து உள்ளது.

முதல் அமைச்சரவைப் பத்திரம் கொண்டு செல்லப்படும்போதும் கொள்கை தயாரிக்கப்படும்போதும் அவசரச் சூழ்நிலைகளின் போதும் மின் கட்டண மாற்றத்துக்குக் கோரிக்கை விடுப்பதற்கு மின்சார சபைக்கு அதிகாரம் உள்ளது. அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

மின்சார சபையின் மறுசீரமைப்புத் தொடர்பான தற்போதைய நிலை, சட்டமா அதிபரின் வரைவு அலுவலகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் வரைவு அலுவலகம் அதனைத் தயாரித்து கடந்த செவ்வாய்க்கிழமை சட்டமா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்த வாரத்தில் தேவையான விளக்கங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக கடந்த வெள்ளிக்கிழமை சட்டமா அதிபர் என்னிடம் தெரிவித்திருந்தார். மறுசீரமைப்புத் திட்டம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை 6 மாதங்களுக்கு ஒருமுறை இடம்பெறும் மின்கட்டணத் திருத்தத்தை 3 மாதங்களுக்கு ஒரு முறை மேற்கொள்வதற்கான வேலைத்திட்டம் ஒன்றும் தயாரிக்கப்பட்டு வருகின்றது, எனவும் அவர் தெரிவித்துள்ளார். (04)

## எதிர்கட்சி எடுத்த முடிவு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிராகக் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்து நாடாளுமன்றத்தில் இருப்பவர்கள் அவரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தார்கள். நம்பிக்கையில்லாப் பிரேரணைத் தீர்மானத்தில் ஆளும் கட்சியினர் நடந்து கொண்டது பிழை, எதிர்க் கட்சி எடுத்த முடிவு சரி என்று ஜனாதிபதி இன்று தீர்மானித்திருக்கின்றார்.

அமைச்சருக்கு தொடர்ந்தும் இந்த அமைச்சு பதவியை வகிக்க முடியாது என்று ஜனாதிபதி தீர்மானித்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம்.

இங்கு நெருக்கடியாக இருக்கும் மிகப்பெரிய விடயம் ஊழல் மோசடி. ஆகவே அமைச்சர் ரமேஷ் பத்திரன இந்தத் திருடர்களுடன் போராடி ஜெயிக்க வேண்டும். அது இலகுவான காரியம் அல்ல. இந்த விடயத்தை மாற்றுவது என்பது இலகுவான விடயம் அல்ல, எனவும் அவர் சுட்டிக்காட்டியிருக்கிறார். (04)

## அமைச்சர்களை மாற்றிப் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்தும் தரம் குறைந்த மருந்துகள் குறித்தும் முழு நாடுமே கதைத்தது. இந்த அமைச்சரவை மாற்றத்தால் இது சரி செய்யப்படுமா? இது ஒரு நகைப்புக்குரிய விடயமாகும்.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி கூறுகிறார். அவர் என்ன தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரா? இந்நாட்டுச் சட்ட திட்டங்களுக்கு ஏற்பவே தேர்தல்கள் திணைக்களம் செயற்படும்.

தனது தேவைக்கேற்ப ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டிய அவசியமொன்றும் இங்கில்லை. அடுத்த வருடம் சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியே ஆக வேண்டும்.

சுகாதார அமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முன்வைத்து விவாதம் நடக்கும்போது, சுகாதார அமைச்சருக்குப் பக்கபலமாக இருப்பதைக் காட்டும் முகமாக ஜனாதிபதி சபா பீடத்தில் இருந்தார்.

அன்று பாதுகாத்தவர், இன்று மாற்றியுள்ளார். ஆனால், அவர் செய்த ஊழல் மோசடிகளை மூடி மறைக்க நாம் இடமளிக்க மாட்டோம்!, எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்துள்ளார். (04)

## தலைவலிக்கு தலையணையை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறினால் இதனை நம்ப முடியுமா? என அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

சங்கீதக் கதிரை விளையாட்டே இதில் இடம்பெறுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் எதிர்ப்பு எரிமலையைப் போன்று எரியும் சந்தர்ப்பத்தில் மக்களுக்கு அரசாங்கத்தின் பதில் இதுவாக இருக்கின்றது எனவும், முறையான வேலைத் திட்டம் ஒன்றை முன்னெடுப்பதே இதற்கான சரியான தீர்வு எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)





# விற்பனையாளர் தேவை

**நிறுவனம்:** யாழ்முற்றம்
**பால்:** இருபாலரும்
**வேலை நேரம்:** காலை 7:00 மணி - மாலை 7 மணி வரை
**சம்பளம்:** பேசித் தீர்மானிக்கப்படும்
**தொடர்புகளுக்கு:** +94 77 307 8799

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# கல்முனை கார்மேல் பற்றிமாவில் வாணிவிழா!





(காரைதீவுச் செய்தியாளர்)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியின் வருடாந்த வாணி விழா இன்று கல்லூரி அதிபர் அருட் சகோதரர் ச.இ. றெஜினோல்ட் எவ்.எஸ். ஸி. தலைமையில் நடைபெற்றது.

ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு ராமகிருஷ்ண மிஷன் ஆச்சிரம பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் கலந்து ஆசி வழங்கினார். கல்முனை ஆதாரவைத்திசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் இரா. முரளீஸ்வரன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் ரி.ஜே. அதிசயராஜ், பிரதம குரு சிவஸ்ரீ கோபால நிரோஷன், உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, கோட்டக் கல்விப்பணிப்பாளர் ச.சரவணமுத்து, தொழிலதிபர் பிரகலதன் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் பொறியியலாளர் ரி.கதீசன் ஆகியோர் உள்ளிட்ட அதிதிகளும் விழாவில் கலந்துகொண்டார்கள்.

மாணவர்களின் கலைநிகழ்ச்சிகளும் நிகழ்வில் மேடையேறின.

# பொரளை அஹதிய்யாவின் 37ஆவது மீலாதுந் நபி விழா





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

பொரளை அஹதிய்யா இஸ்லாமிய கல்வி நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 37 ஆவது மீலாதுந் நபி விழா தெமட்டகொட அகில இலங்கை வை.எம்.எம்.ஏ. மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

ருவனிகம சமாதி நாயக்க தேரர், சிவஸ்ரீ குமாரசுவாமி குருக்கள், அல்-ஹாஜ் அஷ்-ஸெய்யித் கலாநிதி ஹஸன் மௌலானா அல்-காதிரி மற்றும் பேராயர் ஜே. ஞானராஜா பாதிரியார் உட்பட்ட சர்வ மதத் தலைவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், அஹதிய்யாப் பாடசாலையின் அதிபர் அல்-ஹாஜ் ஷிப்லி ஹாஷிம் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில் அஹதிய்யா பாடசாலை ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பெற்றோர், ஊடகவியலாளர்கள் உட்பட ஏராளமானோர் கலந்துகொண்டிருந்தனர்.

# தம்பலகாமம் மயில் தீவுப் பகுதியில் பெரும்போக நெற்செய்கை ஆரம்பம்





(ஹஸ்பர்)

பெரும்போக நெற் செய்கைக்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. தம்பலகாமம் பிரதேசத்தில் உள்ள மயில் தீவு 6ஆம் வாய்க்கால் வயல் நிலப்பகுதிகளிலும் உழுதல் முதல் விதைப்பு நடவடிக்கைகளும் இடம்பெற்றுவருகின்றன.

விதைப்பதற்காக நிலத்தைச் சமப்படுத்தி இயந்திரம் மூலமாக உழுதலை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த சிறுபோகத்தின்போது பசளையின்மையாலும் கால தாமதமாக பசளை கிடைத்ததாலும் விளைச்சல் குறைவாகக் காணப்பட்டது.

இருந்த போதிலும் இம்முறை பெரும்போகச் செய்கைக்காவது பசளையை நேரகாலத்தோடு தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர். இப்பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட எதிர்பார்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# எகிப்து ராணுவ எல்லையில் தவறுதலாக எறிகணைத் தாக்குதல்! – இஸ்ரேல் வருத்தம்



தவறுதலாக எகிப்து ராணுவ எல்லையில் தாக்குதல் நடத்தியதற்கு இஸ்ரேல் ராணுவம் வருத்தம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல், காஸாவையொட்டியுள்ள எகிப்து எல்லையில் இஸ்ரேலின் எறிகணை தவறுதலாக எகிப்து ராணுவ எல்லைப்பகுதியில் தாக்கியுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேல் பாதுகாப்புப் படை தனது அதிகாரப்பூர்வ சமூகவலைத்தளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளது. அதில், சிலமணிநேரங்களுக்கு முன்பு இஸ்ரேலின் எறிகணை தவறுதலாக கேரேம் ஷலோம் எல்லையையொட்டிய எகிப்து ராணுவ எல்லைப் பகுதியை தாக்கியுள்ளது. இது தொடர்பாக விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த சம்பவத்துக்கு இஸ்ரேல் பாதுகாப்புப் படை வருத்தம் தெரிவித்துக்கொள்கிறது எனக் குறிப்பிட்டுள்ளது.

கேரேம் ஷலோம் என்பது காஸாவையொட்டிய இஸ்ரேல் - எகிப்து எல்லைப் பகுதியாகும். தெற்கு இஸ்ரேல் படையினர் இங்கு காஸாவின் ஹமாஸ் படைக்கு எதிராகத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். (04)



# மியான்மரில் நிலநடுக்கம் 4.3 ரிச்டர் ஆகப் பதிவானது

மியான்மரில் இன்று காலை 6.30 மணியளவில் 4.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் மியான்மர் தலைநகர் நேய்பிடாவில் இருந்து 90 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து இன்னும் தகவல்கள் வெளிவரவில்லை.

முன்னதாக, நேபாளத்தில் நேற்று (ஒக்டோபர் 22) காலை 7.24 க்கு 5.3 ரிச்டர் அளவிலும், மாலை 5.18 மணிக்கு 4.3 ரிச்டர் அளவிலும் நிலநடுக்கங்கள் ஏற்பட்டன.

இதனையடுத்து, இந்தியாவின் ஜம்மு காஷ்மீரிலும் நேற்று இரவு 11 மணியளவில் 3.5 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவானது. அடுத்தடுத்து ஏற்படும் நிலநடுக்கங்களால் குறித்த பிரதேச மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். (04)

# இரு பெண் பத்திரிகையாளர்களுக்கு ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை



ஈரானில் இரு பெண் பத்திரிகையாளர்களுக்கு ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு பொலிஸ் காவலில் உயிரிழந்த மாஷா அமீனி தொடர்பான செய்தியை வெளியுலகுக்குக் கொண்டு வந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களான இவர்கள் மீது அமெரிக்க அரசுக்கு 'ஒத்துழைப்பு' அளித்தது உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஈரானின் சர்ச்சைக்குரிய ஆடைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட குர்து இனத்தைச் சேர்ந்த மாஷா அமீனி என்ற பெண், கடந்த ஆண்டு செப்டம்பரில் பொலிஸ் காவலில் இருந்தபோது உயிரிழந்தார்.

தலையை மறைக்கும் வகையிலான ஆடையைச் சரியாக அணியாததால் மாஷா அமீனியை காவலர்கள் கைது செய்தார்கள் என்ற செய்தியை நிலோபர் ஹமேதியும், மாஷா அமீனியின் இறுதிச்சடங்கு தொடர்பான செய்தியை எலாகே முகமதியும் வெளியிட்டனர். மாஷா அமீனியின் மரணம் ஈரானில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து, கடந்த ஆண்டு செப்டம்பரில் கைது செய்யப்பட்ட பத்திரிகையாளர்கள் இருவரும் ஓராண்டாக சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர்.

அமெரிக்க அரசுக்கு ஒத்துழைப்பு அளித்தல், தேசியப் பாதுகாப்புக்கு எதிராகச் செயல்படுதல், அரசுக்கு எதிரான பிரசாரம் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் இருவருக்கும் தெஹ்ரான் நீதிமன்றம் ஏழு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளதாக நீதித்துறைச் செய்தி இணையதளமான 'மைஷான்' ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தது. இந்தத் தண்டனையை எதிர்த்து இருவரும் 20 நாள்களுக்குள் மேல்முறையீடு செய்ய முடியும்.

இந்தப் பத்திரிகையாளர்கள் இருவருக்கும் பத்திரிகைச் சுதந்திரத்துக்கான விருதை அமெரிக்கா கடந்த மே மாதம் அறிவித்தது குறிப்பிடத்தக்கது. (04)

# சர்ச்சைக்குரிய தென்சீனக் கடல் பகுதியில் பிலிப்பைன்ஸ் - சீன கப்பல்கள் மோதல்?




தென்சீனக் கடலில் சர்ச்சைக்குரிய பகுதியில் தங்கள் நாட்டின் கடலோரக் காவல் படை கப்பல் மீது சீனக் கப்பல் மோதியதாக பிலிப்பைன்ஸ் குற்றஞ்சாட்டியுள்ளது.

தென்சீனக்கடல்பகுதி முழுவதையுமே சீனா சொந்தம் கொண்டாடி வருகிறது. இதனால், தென்சீனக் கடல் பிராந்திய நாடுகளான பிலிப்பைன்ஸ், தைவான், மலேசியா, புருணை, இந்தோனேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளுக்கும் சீனாவுக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன.

இந்நிலையில், தென்சீனக் கடலில் சர்ச்சைக்குரிய ஒரு பகுதியில் பிலிப்பைன்ஸின் கடலோரக் காவல் படை கப்பல், ராணுவப் படகு ஆகியவற்றின் மீது சீன கடலோரக் காவல் படைக் கப்பலும், அதன் ராணுவப் படகு ஒன்றும் ஞாயிற்றுக்கிழமை மோதியதாக பிலிப்பைன்ஸ் தெரிவித்தது.

ஆனால், இந்த இரு சம்பவங்களிலும் யாரும் காயமடைந்தனரா, சேதம் ஏற்பட்டதா? என்பது குறித்த விவரங்களை பிலிப்பைன்ஸ் தெரிவிக்கவில்லை.

பிலிப்பைன்ஸின் நீண்டகால நட்பு நாடான அமெரிக்கா இந்தச் சம்பவத்துக்கு உடனடியாகக் கண்டனம் தெரிவித்தது.

சீனக் கடலோரக் காவல் படை இது குறித்து, பிலிப்பைன்ஸ் கப்பலும், படகும் சீன கடல் எல்லைக்குள் அத்துமீறி நுழைந்தன. அவற்றைச் சீனக் கப்பல் தடுத்து நிறுத்தியது என விளக்கம் அளித்துள்ளது. (04)

# இஸ்ரேலில் கொல்லப்பட்ட நேபாள மாணவர்கள் உடல்கள் காட்மண்டுக்கு கொண்டுவரப்பட்டன

இஸ்ரேலில் ஹமாஸ் தாக்குதலில் கொல்லப்பட்ட நேபாள மாணவர்களின் உடல்கள் காட்மண்டுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இஸ்ரேலுக்குள் புகுந்து ஹமாஸ் அமைப்பினர் கடந்த 7 ஆம் திகதி நடத்திய தாக்குதலில் வெளிநாட்டவர் உள்பட சுமார் 1,400 பேர் கொல்லப்பட்டனர். இவர்களில் நேபாளத்தைச் சேர்ந்த 10 மாணவர்களும் அடங்குவர். இவர்களில் 4 பேரின் உடல்கள் டெல் அவிவில் உள்ள நேபாள தூதரகத்தில் அண்மையில் ஒப்படைக்கப்பட்டன.

அங்கிருந்து 4 பேரின் உடல்களுக்கு நேபாளத்துக்கு விமானம் மூலம் கொண்டுவரப்பட்டதாக நேபாள வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. (04)





## "கிராமத்துக்கு ஒரு வீடு" வேலை திட்டத்தின் அட்டாளைச்சேனை பயனாளர் கொடுப்பனவு

(எம்.எப்.நவாஸ்)

"கிராமத்துக்கு ஒரு வீடு" எனும் வேலை திட்டத்தின் கீழ் அட்டாளைச்சேனைப் பிரதேசத்தில் ஐந்து பயனாளர்களுக்கான வீட்டுக்குரிய இறுதிக்கட்டக் கொடுப்பனவு அண்மையில் வழங்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபையின் முகாமையாளர் திருமதி ஐராங்கனியினால் அட்டாளைச்சேனைப் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அகமது ஷாபீர் ஊடாக பயனாளிகளுக்குக் காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட வீடமைப்பு அதிகார சபையின் உதவிப் பொறியியலாளர் ஏ.சி.எம். பாஹிம், தொழிநுட்ப உத்தியோகத்தர் ஜே.அமீன், கே.பிரியந்தன், நிர்வாக உத்தியோகத்தர் கே.வி.சலீம் மற்றும் கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஜௌபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்

## யாழ் ஊடக அமையத்தின் 2023-2024 ஆண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவு



யாழ் ஊடக அமைய பொதுக்கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றபோது, புதிய ஆண்டுக்கான நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தலைவர் உரை,செயலாளர் உரை, பொருளாளர் கணக்கறிக்கை வாசித்தல் என்பன இடம்பெற்று புதிய நிர்வாகத் தெரிவு யாழ் ஊடக அமைய உறுப்பினர்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.

இதன்போது, யாழ் ஊடக அமையத்தின் புதிய தலைவராக மூத்த பத்திரிகையாளர் குமாரசாமி செல்வகுமார் ஏக மனதாக தெரிவு செய்யப்பட்டார்.

செயலாளராக சி.நிதர்சனும் பொருளாளராக க.கம்சனனும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, உப தலைவர் , உப செயலாளர் தெரிவை அடுத்து நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ். ஊடக அமையமானது, 10 ஆண்டுகளை கடந்து 11ஆவது ஆண்டில் கால் பதிக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (O1)




## கல்முனை மாநகர சபையில் இடம்பெற்ற வாணி விழா





(ஏ.எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையில் ஒழுங்கு செய்யப்பட்ட வருடாந்த வாணி விழா இன்று திங்கட்கிழமை நடைபெற்றது.

மாநகர சபையின் நிர்வாகப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் என். பரமேஸ்வரவர்மண் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜே.எச்.ஜௌஸி, வேலைகள் அத்தியட்சகர் வி.உதயகுமரன் ஆகியோருடன் பிரிவுத் தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.வரதராஜன் சகலகலாவல்லிமாலை பாடலைப் பாடினார். பெரிய நீலாவணை சிறிமகா விஷ்ணு தேவஸ்தான பிரதம குரு ஈசான சிவம் பத்ம நிலோஜ சர்மா அவர்கள் சிறப்பு பூசையை நடாத்தி, ஆன்மீக உரையையும் நிகழ்த்தினார்.

## தம்பலகாமம் பிரதேச செயலக வாணி விழா



(ஹஸ்பர்)

தம்பலகாமம் பிரதேச செயலகத்தில் சரஸ்வதி, மகாலட்சுமி, துர்க்கை ஆகிய முப்பெரும் தேவியரைப் போற்றும் வாணி விழா நிகழ்வானது இன்று தம்பல காமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

விசேட பூசை வழிபாடுகளும் இதன்போது இடம் பெற்றதுடன், பூசைகளை தம்பலகாமம் ஆதிகோண நாயகர் கோயிலின் பிரதம குரு மோகனகாந் சர்மா செய்தார்.

இந்நிகழ்வில், தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி, உதவிப் பிரதேச செயலாளர் இரா.பிரசாந் தன், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் உடகெதர மற்றும் பிரதேச செயலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.

# நிந்தவூர் ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலை தற்காலிகமாக இடமாற்றம் செய்வதற்கு அனுமதி

(கே.எ.ஹமீட்)

நெல் சந்தைப்படுத்தும் சபையின் பராமரிப்பில் உள்ள நிந்தவூர் நெல் களஞ்சிய சாலையின் பாவிக்கப்படாமல் உள்ள கட்டிடத்தில் நிந்தவூர் ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையை தற்காலிகமாக இடமாற்றுவதற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் உப குழுவினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் உப குழுவின் கூட்டம் நேற்று நிந்தவூர் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஏ.எம்.அப்துல் லத்தீபின் நெறிப்படுத்தலில் நாடாளுமன்ற உறுப்பினரும், நிந்தவவூர் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முசாரப்பின் தலைமையில் இடம்பெற்றபோதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பிப்பினர் பைசல் காசீம், நிந்தவூர் பிரதேச கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய அமைப்புகளின் சம்மேளனத்தின் பிரதிநிதிகள், வட்டானை அமைப்புகளின் பிரதிநிதி, நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவர் ஏ.றஸீன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நிந்தவூர் ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைக்கான நிரந்தரமான கட்டிடம் அமைக்கப்படும் வரை தற்காலிகமாக நெல் களஞ்சியசாலையின் பாவிக்கப்படாமல் உள்ள கட்டிடத்தில் இடமாற்றுவதற்கு அனுமதி வழங்குமாறு கடந்த நிந்தவூர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பிரேரணை முன்வைக்கப்பட்டிருந்தது. இங்கு இப்பிரேரணை தொடர்பில் ஆராய்ந்ததுடன் விவசாய அமைப்புகள் மற்றும் சகல தரப்பினருடன் கலந்துரையாடுவதற்காக உப குழுவொன்றும் நியமிக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் நேற்றைய கூட்டத்தில் நிந்தவூர் ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலையை விரைவாக நெல் சந்தைப்படுத்தும் சபையின் பராமரிப்பில் உள்ள நிந்தவூர் நெல் களஞ்சியசாலையின் பாவிக்கப்படாமல் உள்ள கட்டிடத்திற்கு இடமாற்றுவதற்கு சகல தரப்பினரும் இணக்கம் தெரிவித்ததுடன் அதற்கான அனு மதியையும் வழங்கினர்.

நிந்தவூர் ஆயுள்வேத ஆராய்ச்சி வைத்தியசாலைக்கான நிரந்தரமான கட்டிடம் அமைக்கப்படும் வரை ஐந்து வருடங்களுக்கு தற்காலிகமாகவே இக்கட்டிடத்தை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அரச ஓய்வூதியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கம் உத்தேச வரவு செலவுத்திட்ட யோசனைக்கு இணக்கம் தெரிவிக்கும்



(நூருல் ஹுதா உமர்)

உத்தேச வரவு செலவுத்திட்ட யோசனைக்கு அரச ஓய்வூதியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்கம் தமது இணக்கத்தை தெரிவிக்கும் எனவும் தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் இந்த தீர்மானம் வரவேற்புக்குரியது எனவும் அதன் உப - தலைவரும் ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளருமான ஏ.எல். முகம்மட் தெரிவித்தார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், 2016-2019 வரையான காலப்பகுதியில் ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு 2020 இல் வழங்கப்பட வேண்டிய ஓய்வூதிய அதிகரிப்பை நிலுவை எதுவுமின்றி 2024 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் மூலம்

01.01.2024 முதல் இரு கட்டங்களாக வழங்குவதற்கான ஏற்பாடு, வரவு செலவுத் திட்டயோசனையில் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் நேற்றைய (22) தினம் நம்பகமாக அறியக்கிடைத்தது.

தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கிற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் மூலம் இது சாத்தியமாகி உள்ளது. இது தொடர்பிலான வழக்கின் விவாதம் ஆரம்பித்துள்ளது. இதன் அடுத்த கட்ட விவாதம் எதிர்வரும் 15.02.2024 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

எனவே உத்தேச வரவு செலவுத்திட்ட யோசனைக்கு அரச ஓய்வூதியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய இயக்கம் தமது இணக்கத்தை தெரிவிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாண பல்கலையில் விஜயதசமி ஏடு தொடக்கலும் கலை நிகழ்வுகளும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் விஜயதசமியை முன்னிட்டு ஏடு தொடக்கலும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

அதற்கமைய நாளை காலை யாழ். பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நாளை காலை 8 மணியளவில் பூசைகள் ஆரம்பமாகி, வாழை வெட்டு நடைபெற்று, அதனைத் தொடர்ந்து 10 மணியளவில் ஏடு தொடக்கலும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

எனவே, அனைவரும் ஆலயத்திற்கு வருகை தந்து இறைவனின் அருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்றம் அழைப்பு விடுத்துள்ளது.




JRIDE
ONLINE TAXI APP
FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
+94 21 222 8358

# கிழக்கு மாகாணத்தில் வெள்ளி, ஞாயிறு தனியார் கல்வி வகுப்புகளுக்குத் தடை

கிழக்கு மாகாணத்தில் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் தனியார் கல்வி வகுப்புகளை நடத்துவதைத் தடைசெய்து மாகாணக் கல்வி அமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அறநெறிக் கல்வியில் ஈடுபடுவதற்கு போதிய கால அவகாசம் இல்லாத வகையில் தனியார் கல்வி வகுப்புகள் நடத்தப்படுகின்றமையால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண கல்விச் செயலாளர் சட்டத்தரணி எச்.இ.எம்.டபிள்யூ.ஜி.திஸாநாயக்க விடுத்துள்ள சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2 மணி வரையிலும், மழை பெய்யும் நாட்களில் முழு நாளும் தனியார் வகுப்புகள் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பில் ஆராய வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதுடன், பொலிஸ் மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களின் உதவியை நாடுமாறும் சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, திருகோணமலை வடக்கு, கந்தளாய், அம்பாறை, மஹாஓயா மற்றும் தெஹியத்தகண்டி ஆகிய பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்களுக்கு இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.10.2023இல் வெளியிடப்பெற்றது.